Deposition of witness
(Chapter XXIII Code of Criminal Procedure
District Munsif cum Judicial Magistrate Court, Alangudi.
CC No. 104/2023

## Deposition of P.W.3

| | | |
|---|---|---|
| Name | : | சுரேஷ் |
| Father's Name | : | கணேசன் |
| Village | : | வடகாடு |
| Age | : | **42 /2025** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 09.09.2025**
( எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல்விசாரணை**

நான் ஆலங்குடி வடகாடு கிராமத்தில் வசித்து வந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணன் ஆவார். எனது வீட்டிற்கு அருகில்தான் அ.சா.1 வசித்து வருகிறார். எதிரி எனது சகோதரர் ஆவார். கடந்த 09.04.2023 அன்று மதியம் 2.30 மணியளவில் எதிரி நடராஜன் எனது அண்ணனுக்கு சொந்தமான விவசாய தோட்டத்தில் எனது அண்ணன் இருந்தபோது அவரை தகாத வார்த்தைகள் பேசி மண்வெட்டியால் தாக்கியதாக எனக்கு தகவல் கிடைத்தது. நான் சென்று பார்த்தபோது தோட்டத்தில் கூட்டமாக இருந்தது. இது சம்பந்தமாக எனது அண்ணன் புகார் அளித்தார் போலிசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விபரம் கூறினேன்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

புகார்தாரர் ராமலிங்கம் எனக்கு அண்ணன் உறவுமுறை ஆவார். ராமலிங்கத்திற்கும் நடராஜனுக்கும் இடம் சம்பந்தமான பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். எனக்கு சாலையிலிருந்து கிடைத்த தகவலின் பேரில் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் சம்பவ இடத்திற்கு சென்றபோது நிறைய நபர்கள் இருந்தார்கள். போலிசார் என்னை அரசு மருத்துமனையில் வைத்து விசாரித்தார்கள். அ.சா.1 ன் மனைவியும், மகனும் சொல்லிதான் சம்பவத்தை பற்றி கேள்விபட்டேன் என்றால் சரிதான். போலிசார் எழுதி கொண்டதை நான் படிக்கவில்லை. நான் சொல்வது

பொய் என்றும், இவ்வழக்கின் பாதிக்கப்பட்டவர் எனது உறவினர் என்பதால் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.